இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. விவேக், பிரபல திரைப்பட நடிகர் மற்றும் சமூக ஆர்வலர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். "சின்னக் கலைவாணர்" எனத் திரையுலகில் புகழ்பெற்ற, பல்கலை வித்தகராக விளங்கிய நகைச்சுவைக் கலைஞர் திரு. விவேக் அவர்கள், 17–4–2021 அன்று உடல்நலக்குறைவால் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

தனது நடிப்பாற்றலால் நகைச்சுவையுடன் விழிப்புணர்வையும் மக்களுக்கு வழங்கிய திரு. விவேக் அவர்கள், மரம் நடுதல் போன்ற சூழலியல் சார்ந்த சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பத்மஸ்ரீ விருது பெற்ற பெருமைக்குரியவர். அன்னாரது மறைவு திரைப்படத் துறைக்கும், ரசிகப் பெருமக்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகப் பெருமக்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.